ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2445/72 - 2025 ජූලි මස 19 වැනි සෙනසුරාදා - 2025.07.19

*2445/72 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு - திருத்த இலக்கம் 05**

*கீழே I ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்பட்ட 2013, திசெம்பர் 11 ஆந் திகதிய 1840/34 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவைப் பிரமாணக் குறிப்பு கீழே II ஆம் பகுதியில் காட்டப்பட்டுள்ளவாறு திருத்தஞ் செய்யப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் எதுவித மாற்றங்களுமின்றி அவ்வாறே காணப்படும்.*

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

**என். யூ. நிஷான் மெண்டிஸ்,**
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

*2025, யூலை 14.*

**பகுதி I**

*திருத்த இலக்கம் 01 - 2017, ஓகத்து மாதம் 16 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 2032/ 26 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி.*
*திருத்த இலக்கம் 02 - 2018, சனவரி மாதம் 04 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 2052/ 26 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி.*
*திருத்த இலக்கம் 03 - 2019, செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 2140/ 4 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி.*
*திருத்த இலக்கம் 04 - 2025, மாச்சு மாதம் 04 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 2426/ 25 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானி.*

1A – G 45905 – 05 (2025/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**பகுதி** II

கீழே குறிப்பிடப்படும் பந்திகளிலுள்ள பகுதிகள் உள்ளடக்கப்படுவதுடன் ஏனைய விடயங்கள் மாறாது காணப்படும்.

10.1.2 பதவி உயர்வுப் பரீட்சையில் சித்தி பெறுபவர்களை தரம் III இலிருந்து தரம் II இற்கு உயர்த்தல்

(i) பதவி உயர்வு பரீட்சைக்கு தகைமைகளை பரீட்சிக்கும் இறுதி தினத்திற்கு அல்லது அதற்கு முன்னர் குறைந்தபட்சம் தரம் III இல் 3 வருடங்கள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்துள்ளவர்கள் 3 சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றவர்கள் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு வேறு முறையில் தகுதியற்றவர்கள் அல்லாத உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு/ தோற்றுவதற்கு வாய்ப்புள்ளதுடன் பதவியுயர்வு பெறுவதற்காக இவ் பரீட்சையில் சித்தியடைவதற்கு மேலதிகமாக 10.1.2.1 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்வது கட்டாயமாகும்.

10.1.2.1 பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்:

(i) நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
(ii) சேவை தொகுதியின் தரம் III இல் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல் மற்றும் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்றிருத்தல்.
(III) அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு நடைமுறைக்கு ஏற்ப பதவியுயர்வு தினத்திற்கு முன்னர் ஐந்து (05) வருடங்களுக்குள் திருப்திகரமான மட்டம் அல்லது அதற்கு மேலான செயலாற்றுகையை காட்டியிருத்தல்.
(iv) அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனையொன்றை பெற்றிருத்தலாகாது.
(v) உரிய வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.
(vi) உரிய மட்டத்தில் ஏனைய அரசகரும மொழித் திறனை பெற்றிருத்தல்.
(vii) இணைப்பு 12 இல் குறிப்பிடப்படும் தரம் II இற்கு பதவியுயர்த்தும் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

குறிப்பு

1. பதவியுயர்வு பரீட்சை தொடர்பான தகவல்கள் மற்றும் விடய பரிந்துரைகள் இணைப்பு 12 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.
2. உரிய பதவியுயர்வு பரீட்சையினை முதலாம் மற்றும் இரண்டாம் தடவைகளில் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் தரம் III இல் ஐந்து (05) வருட செயலுக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்யும் தினத்திலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.
3. தரம் II இற்கு பதவியுயர்த்தும் பரீட்சையை மூன்றாம் பரீட்சை தடவையில் பூர்த்தி செய்யும் உத்தியோகத்தர்கள் தரம் III இல் ஐந்து (05) வருட செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்யும் தினம் அல்லது பதவியுயர்வு பரீட்சையில் சித்தியடைந்த தினம் ஆகிய இரு தினங்களுக்கு பின்னர் வரும் தினத்திலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.
4. இவ் பரீட்சைக்கு அடுத்தடுத்து மூன்று (03) சந்தர்ப்பங்கள் மட்டுமே வழங்கப்படும்.

இடைக்கால ஏற்பாடுகளின் கீழ் 15.4 மற்றும் 15.5 ஆக இரு புதிய பிரிவுகள் மற்றும் துணை பிரிவுகள் உள்ளடக்கப்படுகின்றன.

15.4 2015.04.19 ஆந் திகதி நடைபெற்ற முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மற்றும் திகதிக்கு பின்னர் சேவையின் இனைந்த, இவ் சேவை பிரமாணக் குறிப்பினை திருத்திய பின்பு நடாத்தப்படும் தரம் II இற்கு பதவியுயர்த்தும் பரீட்சைகளில் சித்தியடையும் உத்தியோகத்தர்கள் கீழ்வருமாறு தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

(i) தரம் II இற்கு பதவியுயர்த்தும் பரீட்சையில் தொடர்ச்சியான முதலாம் மற்றும் இரண்டாம் தடவைகளில் சித்தியடையும் உத்தியோகத்தர்கள், 10.1.2.1 இல் குறிப்பிடப்படும் தகைமைகளை பூர்த்தி செய்திருப்பின்; தரமுயர்த்தல் செய்யும் பரீட்சையை சித்தியடைந்த தினம் அல்லது தரம் III இல் ஐந்து (05) வருட செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்யும் தினம் ஆகிய இரு தினங்களுக்கு பின்னர் வரும் தினத்திலிருந்து தரம் II இற்கு பதவி உயர்த்தப்படுவார்கள். அவ் உத்தியோகத்தர்கள் பதவியுயர்வு பரீட்சையில் சித்தியடைகின்ற தினத்திற்கு முன்பு பூர்த்தி செய்துள்ள தரம் III இல் ஐந்து (05) வருடங்களுக்கு மேலான செயலூக்கமான மற்றும் திருப்பதிகரமான சேவைக் காலம் பதவியுயர்வு விடயங்களுக்கான தரம் II இன் சேவைக் காலமாக கருதப்படும்.

(ii) மூன்றாம் சந்தர்ப்பத்தில் தரம் II இற்கு பதவியுயர்த்தும் பரீட்சையில் சித்தியடையும் உத்தியோகத்தர்கள் ஐந்து (05) வருட செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்யும் தினம் அல்லது பதவியுயர்வு செய்யும் பரீட்சையை சித்தியடைந்த தினம் ஆகிய இரு தினங்களுக்கு பின்னர் வரும் தினத்திலிருந்து தரம் II இற்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

15.5 2007.01.01 ஆந் திகதிக்கு முன்னர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மற்றும் 2007.01.01 ஆந் திகதியிலிருந்து 2013.04.01 ஆந் திகதி வரையில் (அதாவது 2006.01.21 ஆந் திகதியிலிருந்து 2010.05.08 ஆந் திகதி வரையில் நடந்த பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில்) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களும் இவ் பிரமாணக் குறிப்புத் திருத்தம் வெளியிட்ட பின்பு முதற் தடவையாக நடைபெறும் தரம் II இற்கு பதவியுயர்த்தும் அடுத்தடுத்ததான பரீட்சை சந்தர்ப்பங்கள் மூன்று (3) மட்டும் (முன் சேவை பிரமாணக் குறிப்பின் கீழ் கிடைத்துள்ள பரீட்சை தடவைகளின் எண்ணிக்கை உட்பட) முகம் கொடுக்கலாம் அவ் பதவியுயர்வு பரீட்சையில் சித்தியடையும் தரம் II இன் உத்தியோகத்தர்கள் கீழ் வருமாறு தரம் I இற்கு பதவியுயர்த்தப்படுவார்கள்.

(i) பதவியுயர்வு பரீட்சையின் (முன் சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ்க் கிடைத்துள்ள பரீட்சை தடவைகளின் எண்ணிக்கை உட்பட) சித்தியடையும் உத்தியோகத்தர்கள். 10.2.1.1 இல் குறிப்பிடப்படும் தகைமைகளை பூரத்தி செய்திருப்பின் பரீட்சை நடைபெற்ற தினம் அல்லது தரம் II இல் ஐந்து (05) வருட செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவை காலத்தை பூர்த்தி செய்யும் தினம் ஆகிய இரு தினங்களுக்கு பின்னர் வரும் தினத்திலிருந்து தரம் I இற்கு பதவியுயர்த்தப்படுவார்கள். அவ் உத்தியோகத்தர்களை பதவியுயர்த்துவதற்கான பரீட்சையில் சித்தியடைந்த தினத்திற்கு முன்னர் பூர்த்தி செய்துள்ள ஐந்து வருட (05) காலத்திற்கு அதிகமான சேவைக் காலம் உட்பட முழுமையான பதினைந்து (15) வருட சேவை காலத்திற்கு அதிகமான செயலூக்கமான மற்றும் திருப்திகரமான சேவை காலம் பதவியுயர்வு விடயங்களுக்காக தரம் I இன் சேவைக்காலமாக கருதப்படும்.

**பகுதி** III

கீழே குறிப்பிடப்படும் புதிய இணைப்பு உள்ளடக்கப்படும்.

இணைப்பு 12

**முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இன் உத்தியோகத்தர்களை தரம் II இற்கு பதவியுயர்த்தும் பரீட்சைக்கான விதிமுறைகள் மற்றும் பரிந்துரைப்பத்திரம்**

01. பரீட்சை தொடர்பான விபரங்கள்

| வினாத்தாள் | காலம் | மொத்த புள்ளிகள் |
|---|---|---|
| 1. தாபன நடைமுறைகள் மற்றும் நடைமுறை விதிகள் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| 2. நிதி முறைமைகள் | 2 மணித்தியாலங்கள் | 100 |
| 3. பொது வினாத்தாள் | 1 1/2 மணித்தியாலங்கள் | 100 |

**குறிப்பு**

(i) அனைத்து விடைதாள்களிலும் தெளிவற்ற கையெழுத்துக்கள் மற்றும் இலக்கணத் தவறுகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். வாசிக்க முடியாத வகையில் எழுத்துக்கள் எழுதப்பட்டிருப்பின் பரீட்சார்த்திகள் தகைமையற்றவர்களாகக் கருதப்படுவார்கள்.
(ii) சேவைக்கு உள்வாங்கப்படுவதற்கான போட்டிப் பரீட்சைக்கு தாம் தோன்றிய மொழியில் பரீட்சார்த்திகள் இவ் வினாப்பத்திரங்களுக்கு விடையளிக்க வேண்டும்.
(iii) இவ் போட்டிப் பரீட்சையில் சித்தியடைவதற்காக அனைத்து பாடத்திற்கும் குறைந்தபட்சம் நூற்றிற்கு நாற்பது (40%) மற்றும் மூன்று (03) பாடங்களுக்கான மொத்த புள்ளிகள் 130 இற்கு குறையாது ஒரு தடவையில் பரீட்சார்த்திகளினால் பெற்றுக் கொள்ள வேண்டும்.

02. நடாத்தும் அதிகாரி: பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது நியமன அதிகாரியினால் பெயர் குறிக்கப்படும் தாபனமொன்று.

03. பரீட்சைக்கான பாடத்திட்டம்:

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. தாபன நடைமுறைகள் மற்றும் நடைமுறை விதிகள் | அலுவலக முறைமைகளின் அடிப்படைகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்து மூலமான தொடர்பாடல், ஆவணங்களைக் கோவைப்படுத்தல் மற்றும் மாதிரிப் படிவங்களைத் தயாரித்தல் போன்ற பகுதிகளை உள்ளடக்கிய வகையில் அரசாங்க அலுவலகங்களில் பயன்பாட்டிலுள்ள அலுவலக முறைகள் பற்றிய அறிவு, அலுவலகச் செயற்பாடுகளின் போது பெற்றுக்கொண்ட அனுபவத் தேர்ச்சி என்பனவற்றை பரீட்சிப்பது இவ் வினாத்தாளின் நோக்கமாகும்.<br>அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொகுதி I மற்றும் தாபனவிதிக் கோவையின் தொகுதி I இல் உள்ளடங்கியுள்ள விடயங்கள் தொடர்பான அறிவினை பரீட்சிக்கும் பகுதிகளை இவ்வினாத்தாள் உள்ளடக்கியிருக்கும். |
| 2. நிதி முறைமைகள் | (அ) I ஆம் பகுதி - கூட்டல் மற்றும் கழித்தல் தொடர்பான பயிற்சி (25 புள்ளிகள்)<br>(கூட்டல் செய்யும் பயிற்சிக்காக கணிப்பானை பயன்படுத்த முடியாது. காலம் 15 நிமிடங்கள் மட்டுமாகும்.)<br>(ஆ) II ஆம் பகுதி - அரசாங்கத் திணைக்களங்களிலும் அமைச்சுக்களிலும் பயன்பட்டிலுள்ள நிதிக் கட்டுப்பாடு, நிதிப் பொறுப்புக்கள், வருமானங்களும் கொடுப்பனவுகளும், வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, வழங்கல் வேலைகள் மற்றும் சேவைகள் ஆகிய பாடங்கள் தொடர்பான அறிவையும் விளக்கத்தையும் பரீட்சித்தல் (50 புள்ளிகள்)<br>(இ) III ஆம் பகுதி - தொகை மதிப்பீடு மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பான அடிப்படைகள் - (25 புள்ளிகள்) |
| 3. பொது வினாத்தாள் | இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.<br>(அ) ஏதேனும் கூற்று அல்லது கலந்துரையாடல் குறிப்பொன்றை வாசித்து புரிந்து கொண்டு கடிதமொன்றை அல்லது/அறிக்கையொன்றை தயாரித்தல்.<br>(ஆ) சமகால சமூக நடைமுறைகள் தொடர்பில் விளங்கி அதனை விளக்கும் இயலுமையை பரீட்சித்தல். |

பாடத்திட்டம் மற்றும் விண்ணப்பிக்கும் முறை தொடர்பில் முழுமையான விபரத்தை அறிந்து கொள்வதற்காக இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அவ்வப்போது வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் பரீட்சார்த்திகளின் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

EOG 07-0238

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.